1980 பிப்ரவரி 2]

திரு. எஸ். ஜே. இராமசாமி: தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் பேரறிஞர் அண்ணா காலத்தில் போடப்பட்டதாகும். தற்போது அதில் சுணக்கம் ஏற்பட்டு இருக்கிறது. அந்த வேலை நடைபெறவில்லை. அந்த வேலையை விரைவில் பூர்த்தி செய்ய அரசு கவனம் செலுத்துமா? ஏதோ ஒரு பீங்கான் குழாய் வரவில்லை என்பதால் தாமதம் என்று சொல்கிறார்கள். அதைப் பெறுவதில் ஏன் காலதாமதம் ஏற்படுகிறது? வேறு இடத்தில் அதை வாங்க முடியாதா? ஒப்பந்தம் செய்து கொண்ட கான்டிராக்டர் காலதாமதம் செய்கிறார் என்றால், அவரை மாற்றுவதற்கான வாய்ப்பு இல்லையா? அமைச்சர் அதற்கான விளக்கம் அளிப்பாரா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தில் அனைத்துப் பணிகளும் மார்ச்சு 1980 ஆம் ஆண்டுக்குள் முடியும் என்று தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தெரிவித்து இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வலங்கைமான் ஒன்றியப் பகுதியில் வடிகால் வசதிகள்

வினா எண் 15—திரு. அ. செல்லப்பா: மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தஞ்சை மாவட்டம், வலங்கைமான் ஒன்றியத்தைச் சேர்ந்த ஆலங்குடி, புலவர்நத்தம், பூந்தோட்டம், சேத்தனூர் சாத்தனூர், குவளவல்லி போன்ற கிராமங்களில் மழை காலத்தில் வடிகால் வசதி இல்லாத காரணத்தால் மூழ்கிவிடுகிறது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதனைத் தடுக்கும் வண்ணம் கும்பகோணம்—நீடாமங்கலம் சாலையில் ஆலங்குடியில் புலவனாற்றில் இரண்டு வடிகுழாய் அமைக்கும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:

(அ) புலவர்நத்தம், சேத்தனூர், பூந்தோட்டம், சாத்தனூர், குவளவல்லி கிராமங்கள் மழைக்காலங்களில் நீரில் மூழ்குவதில்லை. ஆனால், ராஜேந்திரநல்லூர், ஆலங்குடி ஆகிய கிராமங்களில் பெரு மழைக் காலங்களில் ஓரிரு நாட்கள் வயல்களில் தண்ணீர் தேங்குவது உண்டு.

(ஆ) ஏற்கெனவே கும்பகோணம்—நீடாமங்கலம் சாலையைக் கடக்கும் புலவனாற்றின் பிரிவு வாய்க்கால்களுக்காக கட்டப்பட்டுள்ள பாலங்கள், தண்ணீர் தேங்காமல் வடியும் அளவுக்கு போதுமானதாக உள்ளது.

திரு. மா. மணிமாறன் : பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் மழை காலங்களில் வயல்களில் நீர் நிறைந்து விடுவதால், விவசாயம், பாதிக்கப்படுகிறது. ஆகவே, தஞ்சை மாவட்டத்தில் வடிகால் வசதிக்கு முன்னுரிமை கொடுக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, அரசு நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறது.

திருச்செந்தூர் ஆவுடையார்குளம் ஆக்கிரமிப்பு

* வினா எண். 16 —திரு. இரா. அமிர்தராஜ்: மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், திருச்செந்தூர் ஆவுடையார்குளத்தை தனியார் ஆக்கிரமிப்பு செய்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எத்தனை ஏக்கர் ஆக்கிரமிப்புக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது?

(இ) ஆக்கிரமிப்பாளர்கள் வெளியேற்றப்படுவார்களா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு.—

(அ) ஆம்.

(ஆ) 3·68 ஏக்கர் நிலம் ஆக்கிரமிப்புக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது.

(இ) ஆக்கிரமிப்பாளர்களை வெளியேற்ற மாவட்ட ஆட்சியர் சட்டப்படியான நடவடிக்கை எடுத்து வருகிறார்.

திரு. இரா. அமிர்தராஜ்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆவுடையார்குளத்தில் மட்டும் ஆக்கிரமிப்பு இல்லை, தமிழகத்தில் எல்லா இடங்களிலும் இந்த ஆக்கிரமிப்பு இருக்கிறது. நீர்த் தேக்கக் குளங்களில் ஆக்கிரமிப்பு இருப்பதால் விவசாயம் பாதிக்கப்படுகிறது. அதனால் விவசாயிகளும் நஷ்டத்திற்குள்ளாக்கப்படுகிறார்கள். ஆகவே, நீர்த்தேக்கக் குளங்களில் இருந்து ஆக்கிரமிப்புகளை அகற்றப் பொதுப் பணித் துறை மூலம் அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, பாசனக் குளங்களில் நிலம் இல்லாத விவசாயிகள் ஆக்கிரமிப்பு செய்துள்ளதால், பாசனம் ஒழுங்காகச் செய்ய முடியாத ஒரு நிலைமை ஏற்பட்டு இருக்கிறது. இதைத் தடுக்க ஏற்கனவே பல அரசுகள் இருந்த நேரத்திலும், அரசின் மூலமாக பல நடவடிக்கைகள் எடுத்தும்கூட, ஆக்கிரமிப்புகள் அப்படியே இருக்கின்றன. நிலச்சட்டம் 6–ஏ பிரிவின்படி சட்டப்படியான